# சங்ககால இலக்கியங்களில் வேளாண் தொழில்நுட்பம்

# Agricultural Technology in Sangam Age Literature

***முனைவர் பி. ஆட்லின் ஜெனிபர்***
உதவி பேராசிரியர், தமிழ்துறை
தூய யோவான்கல்லூரி, பாளையங்கோட்டை
திருநெல்வேலி

**Dr. P. Adlin Jenifer**
*Assistant Professor, Department of Tamil*
*St. John's College, Palayamkottai*
*Tirunelveli*

## *ஆய்வுச் சுருக்கம்*

*சங்ககால இலக்கியம் உலக இலக்கியங்களின் இமயம் என்று போற்றப் படுகிறது. மக்களின் இயற்கையோடு இயைந்த வாழ்வு இலக்கியத்தின் ஆணி வேராக அமைந்தது.*

*வீட்டுவாழ்க்கையைஅகமாகவும், நாட்டு வாழ்க்கையைப் புறமாகவும் கொண்டு எழுதப்பட்ட இவை ஆற்றலுடையவை மட்டுமல்ல, மனிதர்களை நல்வழிப்படுத்து பவையும் கூட. சங்க காலத்தைப் பற்றிய அரசியல், சமூகம், பண்பாடு, சமயம், பொருளாதாரம் பற்றி அறிய நமக்கு இன்று உள்ள ஒரே ஆதாரம் சங்க இலக்கியங்கள் மட்டுமே.*

***முக்கியச் சொற்கள்:*** *சங்க இலக்கியம், வேளாண் தொழில்நுட்பம், நீர்நிலைகள், அகநானூறு, புறநானூறு.*

## *Abstract*

*The Sangam literature is regarded as the Himalayas of world literature. The harmony of the people with nature became the root of literature. Writing with home life internally and country life externally, they are not only powerful but also good for human beings. Sangam literature is the only source we have today to know about the political, social, cultural, religious and economic aspects of the Sangam Age.*

***Keywords***: *Sangam Literature, Agricultural Technology, Water Bodies, Akananuru, Purananooru*

**Citation**

Adlin Jenifer, P. "Agricultural Technology in Sangam Age Literature." *Journal of Tamil Culture and Literature*, vol. 3, no. 3, 2024, pp. 7–9.

CC BY SA

*https://doi.org/10.5281/zenodo.20095840*

**வேளாண் வர்க்கம் உருவாதல்**

*பண்டைத் தமிழர் நிலத்தின் இயற்கை அமைப்பு, இயற்கைச்சுழல், பருவகாலம் ஆகியவற்றிற்கேற்ப பாகுபடுத்தியுள்ளனர். நாடோடி வாழ்க்கை முடிவுற்று, ஒரிடத்தில் கூடி வாழத் தலைப்பட்ட சங்ககால மக்கள் நிலத்தை அடிப்படையாகக் கொண்ட வாழ்வை மேற்கொண்டனர்.*

*உற்பத்திக்கு அடிப்படை ஆதாரமாக நிலமே விளங்கியது. ''ஒவ்வொரு குழுவும் நிலத்தைக் கையகப்படுத்தி பின்னர் அது தனிஉடைமையாக மாறிய நிலையில் வேளாண்வர்க்கம் உருப் பெருகின்றது.''*[1]

**சங்க இலக்கியத்தில் நீர்நிலைகள்**

*தமிழகத்தில் சிறந்த தொழிலாக வேளாண்மை விளங்கியது. ''சுழன்றும் ஏர்பின்னது உலகம், உழந்தும் உழவே தலை'' என வள்ளுவர் கருதினார். வேளாண்மை சிறப்புறக் காரணமாக விளங்கியவை நீர்நிலைகளும், நீராதரங்களுமே ஆகும்.*

***''அம் தண் காவிரி வந்துகவர்பு ஊட்ட***
***தோடுகொள் வேலின் தோற்றம் போல***
***ஆடுகண் கரும்பின் வெண்பு நுடங்கும்***
***நாடுஎனப்படுவது நினதே''***[2]

*எனக்குள முற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனைப் புலவர் வெள்ளைக்குடி நாகனார் பாடியுள்ளார்.*

*பருவம் தவறாமல் பெய்யும் மழை நீரைத் தேக்கிக் கயம், வாவி, தடாகம், பொய்கை, குட்டம், குளம், ஏரி, கிடங்கு, மடு ,மதகு, மடை ,போன்ற நீர்நிலைகளை உண்டாக்கி, அவற்றிலிருந்து தேவைக்கேற்ப நீரைப் பயன்படுத்தினர் என்பதை இலக்கியங்கள் வாயிலாக அறியலாம்.*

*நீர் நிலைகளைஉருவாக்கி இந்நிலவுலகில் தம் புகழைப் பதித்திட வேண்டுமெனப் பாண்டிய நெடுஞ்செழியனைப் பார்த்துக் குடபுலவியனார் கூறும் அறிவுரையினைப் புறநானூற்றுப் பாடல் மூலம் அறியலாம்.*

***''அடுபோர்ச் செழிய! இகழாதுவல்லே***
***நிலன்நெறி மருங்கில் நீர்நிலை பெருகத்***
***தட்டோர் அம்ம, இவன்தட் டோரே***
***தள்ளா தோர்இவன்தள்ளாதோரே.''***[3]

*சோழ நாடு சோறுடைத்து என்ற பெருமைக்குக் காரணமாக விளங்கியவர் கரிகால்சோழன். 1800 ஆண்டுகளுக்கு முன்பே காவிரியின் குறுக்கே பெரிய கருங்கற்களும், களிமண் கலவையும் கொண்டு சுமார் 1080 அடிநீளமும், 40 முதல் 80 அடி அகலமும், 15 முதல் 18 அடி ஆழமும் என்ற விகிதத்தில் ஆற்றின் குறுக்கே நாகவடிவில் வளைவாக கல்லணையைக் கட்டி, நீர்ப்போக்கை ஒழுங்கு செய்து தமிழரின் பொறியியல் திறனை உலகுக்கு உணர்த்திய சிறப்புக்குரியவர் என்பதைப் பொருநராற்றுப்படையில் முடத்தாமக் கண்ணியார் பாடல் உணர்த்துகிறது.*

***''ஏரியும் ஏற்றத்தி னாலும் பிறர்நாட்டு***
***வாரி சுரக்கும் வளன்எல்லாம் தேரின்***
***அரிகாலின் கீழுகூஉம் அந்நெல்லே சாலும்***
***கரிகாலன்காவிரிசூழ் நாடு''***[4]

*மேலும் இது போன்ற அணைக்கட்டுகள் கற்சிறைகள் என்றழைக்கப்பட்டன. இவை நீரின் வேகத்தையும் அழுத்தத்தையும் கட்டுப்படுத்தும் வகையில் வளைவாக இருந்ததை,*

***''வருந்திக் கொண்ட வல்வாய் கொடுஞ்சிறை***
***மீதில்கொடுநீர் போக்கி''***[5]

*என்ற பாடல் மூலம் அறிய முடிகிறது.*

*நீர்ப்பாசன வசதியைப் பெருக்கினால் தான் நிலம் வளப்படும். உழவர்களும், ஊக்கமுடன் உழைத்து உற்பத்தியைப் பெருக்குவர். நீர்ப்பாசன வசதியற்ற நாட்டிலே உற்பத்தி பெருக இயலாது. ஆதலால் அரசின் முதற்கடமை நாட்டிலே நல்ல நீர்ப்பாசன வசதிகளை ஏற்படச் செய்வது தான் என்ற உண்மையை சங்ககால மக்கள் உணர்ந்திருந்தனர்.*

***"நீரும் நிலனும் புணரியோட், ஈண்டு***
***உடம்பும் உயிரும் படைத்திசினோரே"***[6]

*என்பதை இவ்வரிகள் காட்டுகின்றன.*

**நீர் ஆதாரங்கள்**

*இலக்கியச் சான்றுகளுக்கு அடுத்தப் படியாக அரசர்கள் நீர் ஆதாரங்களை உண்டாக்கி தங்கள் பெயரினை பொன்னெழுத்தில் பொறித்து வைத்ததைச் செப்பேடுகளும், கல்வெட்டுகளும் நமக்கு உணர்த்துகின்றன.*

*செப்பேடுகளில் புகழ்பெற்ற கூரம் செப்பேட்டில் முதலாம் பரமேசுவர் மன்னனின் ஆட்சிக்காலத்தில் இருபது சதுர்வேதி பிராமணர்க்குப் பரமேசுவரமங்கலம் என்னும் பெயரில் பிரமதேயமாக நிலம் கொடுத்தான். அத்தோடு அவ்வூரில் பரமேசுவர தடாகம் என்னும் ஏரியை ஏற்படுத்திப் பாலாற்றிலிருந்து நீர் கொண்டு வர பெரும் பிடுகுகால் என்னும் கால்வாயையும் வெட்ட, அக்கால்வாயிலிருந்து தலைவாய், தலைப்பேழை, ஊற்றுக்கால் என்னும் கிளைகளையும் வெட்டிக் கொள்ள அனுமதி அளித்தான் என்று கூரம் செப்போடு கூறுகிறது.*

*கங்கைகொண்ட சோழபுரத்தில் மாமன்னன் இராசேந்திர சோழன், சோழ கங்கன் என்றதன் பட்டப் பெயரால் சோழ கங்கன் என்ற ஏரியை உருவாக்கினான் இன்று பொன்னேரி என்று அழைக்கப்படுகிறது. அந்த ஏரியின் வடிகாலாகதனது சிறப்புப் பெயரான வீரநாராயணன் என்ற பெயரில் வீரநாராயண ஏரி என்று உருவாக்கினான். இன்று அதுவீராணம் ஏரி என்று வழங்கப்படுகிறது.*

**முடிவுரை**

*உழவன் ஒரு நிலத்தைப் பயிரிட பயன்படக் கூடிய விளை நிலமாக மாற்ற எவ்வாறு மீண்டும் மீண்டும் உழுது பண்படுத்துகிறானோ, அதுபோல ஒரு கொள்கையினைப் பழக்கவழக்கத்தை நாகரிகத்தை நடைமுறைபடுத்தி வெளிக்கொணர சங்க இலக்கியங்கள் பெரிதும் உதவுகின்றன.*

*இன்றைய தலைமுறையினருக்கு நீரைச் சேமித்து குளங்களைப் பாதுகாக்கும் முறையினை சங்க இலக்கியங்கள் கற்றுக்கொடுக்கின்றது. கடமையைச் செய்! பலனை எதிர்பாராதே! என்ற ஆன்றோர் வாக்கின் படி நீராதரங்களைச் சீர்படுத்தி நாட்டுக்கும் வீட்டுக்கும் நற்பயனை அளிப்போம்.*

**சான்றெண் குறிப்புகள்**

1. *பெ.மாதையன், சங்க இலக்கியத்தில் வேளாண் சமுதாயம், ப. 4*
2. *புறநானூறு, (53 : 3 , 11)*
3. *புறநானூறு, (18 : 27 -30)*
4. *பொருநராற்றுப்படை (தனிப்பாடல்)*
5. *அகநானூறு, (346 : 9 -10)*
6. *புறநானூறு, (பாடல் எண் 18)*

## References

1. Mathayan, P., Agrarian Society in Sangam Literature, P.4.
2. Purananooru (53 : 3 ,11 )
3. Purananooru (18 : 27 -30 )
4. Porunnaratruppadai (Solo Song)
5. Akananuru (346: 9-10)
6. Purananooru (Song No. 18*)*